# **<u>சார்பு நீதிமன்றம், பாலக்கோடு</u>**

## **<u>வாக்குமூலம்</u>**

## **<u>MCOP.No.114/2022</u>**

## **<u>P.W : 2</u>**

## **<u>22.09.2025</u>**

2025ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 22–ம் தேதி திங்கட்கிழமை (22.09.2025) சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி; திரு. K.கோபிநாத், M.Com., B.L., சார்பு நீதிபதி, பாலக்கோடு அவர்கள் முன்னிலையில் MCOP Bench Clerk அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | கிராமம் | கும்பாரஅள்ளி |
| த.பெ/க.பெ | சுப்பிரமணி | தொழில் | – |
| தாலுக்கா | காரிமங்கலம் | வயது | 38 |

### **<u>முதல் விசாரணை</u>**

நான் மனுவில் 3ம் நபர் ஆவேன். நான் ம.சா.2 ஆக தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

### **குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்த்தேன், விபத்து பற்றி நான் புகார் கொடுக்கவில்லை. இந்த விபத்து சம்மந்தமாக குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. அடிப்பட்டவர்களை நான் மருத்துவமனையில் கொண்டு சென்று சேர்க்கவில்லை. விபத்து குறித்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சாட்சியம் அளிக்க எனக்கு சமூக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. சாட்சியம் அளிக்க என்னை ஜீவானந்தம் வரசொல்லி இருந்தார். விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டது. அந்த வாகனங்களின் பதிவு எண்கள் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பே

கூட்டம் அங்கு கூடிவிட்டது. நான் சென்று பார்க்கும் போது அடிப்பட்டவர்கள் கீழே இருந்தார்கள். வாகனங்கள் அங்கு ஒன்று, இங்கு ஒன்றுமாக இருந்தது. நான் அங்கு இருந்தவர்களிடம் சம்பவம் குறித்து கேட்டு தெரிந்து கொண்டேன். விபத்து தருமபுரி to கிருஷ்ணகிரி தேதிய நெடுஞ்சாலையில் நடந்தது. பிரிவு ரோடும், சம்பவ இடத்திற்கும் தூரம் இருக்கும். எவ்வளவு தூரம் சுமார் 200 அடி இருக்கலாம். சரியாக எவ்வளவு தூரம் என்று சொல்ல முடியாது. நான் கேட்டு தெரிந்து கொண்டதை தான் நான் வாக்குமூலமாக சொல்லியுள்ளேன். யார் யார் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. யாரிடம் விவரம் கேட்டுக் தெரிந்து கொண்டேன் என்பவருடைய பெயரும் தெரியாது.

**<u>MCOP. No. 114/2022, P.W : 1 (ஜீவானந்தம்), நாள் : 22.09.2025</u>**

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்தவர் எனது அப்பா ஆவார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்த விதம் குறித்து மனுவிலும், வாக்குமூலத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் அப்பா அவருக்கு சொந்தமான YAMAHA இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார். அதன் பதிவு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் என் அப்பாவிற்கு ஓட்டுனர் உரிமம் இருந்தது. அதை நான் தாக்கல் செய்யவில்லை. ஓட்டுனர் உரிமம் எனது அப்பாவிற்கு இல்லை என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா அவரது வாகனத்தை காப்பீடு செய்யாமல் தான் ஓட்டிச் சென்றார் என்றால் சரியல்ல. காப்பீடு செய்யாததால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவுடம் என்னுடைய தங்கை கோமதி என்பவர் உடன் சென்றார். இருவருமே தலைகவசம் அணியாமல் தான் சென்றார்கள் என்றால் சரியல்ல. தலைகவசம் அணிந்து சென்றதாக மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா அவரது வாகனத்தை சாலை விதிமுறைக்கு எதிராக இயக்கினார் என்றால் சரியல்ல. விபத்தில் டிராக்டர் மற்றும் ட்ரெய்லர் சம்மந்தப்பட்டது. டிராக்டர் வாகனம் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி பிரிவு ரோட்டில் வந்தது. விபத்து பிரிவு ரோட்டில் தான் நடந்தது. டிராக்டர் ஓட்டுனர் தனது வாகனத்தை மெதுவாகவும், கவணமாகவும் சாலை விதிகளை அனுசரித்து பிரிவு ரோட்டில் இருந்து தருமபுரி to கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் ஓட்டிச் சென்றார் என்றும், விபத்து பிரிவு ரோட்டில்

நடைபெறவில்லை என்றும், பிரதான சாலையில் தான் நடந்தது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் அப்பா தான் அவருடைய இருசக்கர வாகனத்தை வேகமாகவும், அஜாக்கிரத்தையாகவும் ஓட்டிச் சென்று வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் தேசிய நெடுஞ்சாலையில் முன்னால் சென்று கொண்டிருந்த ட்ரெய்லர் பின்புறம் மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. விபத்திக்கு என்னுடைய அப்பாவின் வேகம் மற்றும் கவணகுறைவு காரணம் என்றும், அதனால் எங்களுக்கு இழப்பீடு கிடைக்காது என்றால் சரியல்ல. என் சகோதரி கோமதி விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என் அப்பாவின் தவறை மறைத்து பொய்யான சங்கதிகள் அடிப்படையில் தான் டிராக்டர் ஓட்டுனருக்கு எதிராக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. டிராக்டர் ஓட்டுனர் என் அப்பாவின் மீதோ, தங்கை மீதோ அல்லது இருசக்கர வாகனத்தின் மீதோ மோதவில்லை என்றும், இவ்விபத்திறக்கு அவர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா விபத்து சமய்ததில் 51 வயது ஆகும். என் அப்பாவின் வயதை மனுவிற்காக குறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு சுமார் 62 வயது ஆகும் என்றால் சரியல்ல. என் அப்பா விபத்திற்கு முன்பு மளிகை கடை வைத்து ரூபாய் 25000/- சம்பாதித்து வந்ததாக மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா எவ்வித தொழில் செய்யாமல் வருமான ஈட்டாமல் இருந்தார் என்றால் சரியல்ல. என் அப்பா மற்றும் அம்மா இருவரும் தனியாக குடும்ப அட்டை பெற்று வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். கோமதிக்கு அப்பா இருக்கும் போதே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். நான் என் அப்பாவின் மளிகை கடையை பார்த்துக் கொண்டு இருக்கிறேன். என் அப்பா இருந்த காலத்தில் இருந்தே

அவருடன் மளிகை கடையில் நான் நடத்திக் கொண்டு இருந்தேன். எங்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பிட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் டிராக்டர் ட்ரெய்லர் சாலை விதிமுறைகளுக்கு எதிராக இயக்கப்ட்டது என்றும், மேற்படி வாகன ஓட்டுனர் விபத்திற்கு காரணம் இல்லை என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பிடு செலுத்த கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.